# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண் 100, அண்ணாசாலை, கிண்டி, சென்னை 600 032
தொலைபேசி 044-22201337
மின்னஞ்சல் முகவரி ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

முன்னிலை: திரு மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 05/மா/2025**

**நாள்: 04.03.2025**

திரு.T.உத்தம்ராஜ்
சென்னை ....... முறையீட்டு மனுதாரர்

ஆணையர்
ஆவடி மாநகராட்சி ........ எதிர்மனுதாரர்

சென்னை–600004, மயிலாப்பூர், செங்கழுநீர் பிள்ளையார் கோவில் தெரு, எண்.5/2–(1)ல் வசிக்கும் திரு.T.உத்தம்ராஜ் என்பவரின் 26.12.2023 நாளிடப்பட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 26.12.2023 அன்று பெறப்பட்டு 05/மா/2025 என எண்ணிடப்பட்டு முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது:

**ஆணை**

சென்னை–600004, மயிலாப்பூர், செங்கழுநீர் பிள்ளையார் கோவில் தெரு, எண்.5/2–(1)ல் வசிக்கும் திரு. T. உத்தம்ராஜ் என்பவர் தனது 26.12.2023 நாளிட்ட மனுவில் சென்னை, திருமுல்லைவாயில் கிராமம், சரசுவதி நகரில் உள்ள மனை எண்.482–ல் அனுமதி பெறாமல் விதிமுறை மீறி கட்டடம் கட்டப்பட்டுள்ளது என்பதை குறிப்பிட்டு அது தொடர்பாக தகுந்த நடவடிக்கை எடுக்க இம்முறைமன்ற நடுவத்தை கோரியுள்ளார்.

2. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு, தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 03.01.2024 மற்றும் 27.08.2024 நாளிட்ட கடிதங்களின் மூலம், ஆவடி மாநகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

3. ஆவடி மாநகராட்சி ஆணையர் தனது 22.01.2025 நாளிட்ட அறிக்கையில் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்:

“ஆவடி மாநகராட்சி எல்லைக்குட்பட்ட திருமுல்லைவாயில் கிராமம், சரஸ்வதி நகரில் மனை எண்.482 இல் உள்ள திரு.ஜான்சன் என்பவருக்கு சொந்தமான வணிக வளாகம் மற்றும் குடியிருப்புடன் கூடிய அனுமதியற்ற கட்டுமானத்தினை எதிர்த்து, திரு. உத்தம்ராஜ் என்பவர் கடந்த 12.02.2019, 04.09.2020 மற்றும் 07.09.2020 ஆகிய தேதிகளில் முதல் அமைச்சர் தனிப்பிரிவு மற்றும் பிரதமர் தனிப் பிரிவுகளில் புகார் அளித்துள்ளார்.

அதன் அடிப்படையில் மேற்கூறிய அனுமதியற்ற கட்டுமானத்திற்கு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி விதிகள் 1971 இன்படி கடந்த 18.05.2018, 17.07.2018, 08.01.2021 ஆகிய தேதிகளில் திரு.ஜான்சன் என்பவருக்கு அறிவிப்பு சார்வு செய்யப்பட்டது. இந்நிலையில், மேற்கூறிய புகார் குறித்து விசாரணை மேற்கொள்ள திரு.ஜான்சன் என்பவருக்கு 12.01.2021 அன்று அறிவிப்பு சார்வு செய்யப்பட்டது. ஆனால், அவ்விசாரணையில் திரு.ஜான்சன் என்பவர் ஆஜராகவில்லை. இறுதியாக திரு.ஜான்சன் என்பவருக்கு மேற்கூறிய கட்டிடத்தினை பூட்டி முத்திரையிட ஏதுவாக கட்டிடத்தினை காலி செய்ய 02.02.2021, 23.07.2021 ஆகிய தேதிகளில் அறிவிப்பு சார்வு செய்யப்பட்டது. இந்நிலையில், கடந்த 24.09.2021 அன்று முதற்கட்டமாக மேற்கூறிய கட்டிடத்தில் உள்ள வணிக கடைகள் பூட்டி முத்திரையிடப்பட்டது. அதனை தொடர்ந்து பூட்டி முத்திரையிடப்பட்ட கடைகளின் மின்சார இணைப்பினை துண்டிக்க உதவிப்பொறியாளர், மின்சார வாரியம், திருமுல்லைவாயில் சரகம் அவர்களுக்கு 05.10.2021 அன்று கடிதம் அனுப்பப்பட்டது. இறுதியாக மீதமுள்ள குடியிருப்பு பகுதிகளை பூட்டி முத்திரையிட ஏதுவாக, கட்டிடத்தினை காலி செய்ய கடந்த 24.09.2021 மற்றும் 14.06.2022 ஆகிய தேதிகளில் அறிவிப்பு சார்வு செய்யப்பட்டு, மாநகராட்சி பணியாளர்கள், காவல் துறை மற்றும் மின்சார வாரியம் ஆகியோர் முன்னிலையில் கடந்த 27.06.2022 அன்று பூட்டி முத்திரையிடப்பட்டது.

இதனை தொடர்ந்து, திரு.ஜான்சன் என்பவரால் மாண்பமை சென்னை உயர்நீதி மன்றத்தில் (வழக்கு எண்.W.P.No.of 21781 of 2022) பூட்டி முத்திரையிடப்பட்ட கட்டிடத்தினை திறந்திட வழக்கு தொடரப்பட்டது. அவ்வழக்கு, கடந்த 26.08.2022 அன்று வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையினரை தொடர்பு கொண்டு அனுமதியற்ற கட்டுமானத்தினை முறைப்படுத்துமாறு அறிவுறுத்தி வழக்கு முடித்து வைக்கப்பட்டது. அதனை தொடர்ந்து, திரு. ஜான்சன் என்பவர் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையில் அவரது அனுமதியற்ற கட்டுமானத்தினை முறைப்படுத்த கோரி சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பத்தினை, மேற்கூறிய கட்டிடம் செங்குன்றம் நீர்பிடிப்பு பகுதியில் அமைவதாக தெரிவித்து, அவ்விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டு உத்தரவிடப்பட்டது. இறுதியாக, திரு.ஜான்சன் என்பவருக்கு மேற்கூறிய அனுமதியற்ற கட்டுமானத்தினை இடித்து அப்புறப்படுத்த 18.10.2023, 27.11.2023 மற்றும் 22.01.2025 ஆகிய தேதிகளில் அறிவிப்பு சார்வு செய்யப்பட்டுள்ளது. மேலும், மேற்கூறிய அனுமதியற்ற கட்டுமானத்தினை அப்புறப்படுத்த சட்டப்படியான அடுத்தக்கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்கிற விவரங்கள் தெரிவிக்கப்படுகிறது.

4. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 24.01.2025 அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 09.01.2025 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் திரு.T.உத்தம்ராஜ் 24.01.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

"காலம் சென்ற எனது தந்தை திரு.எஸ்.தேஜ்ராஜ் அவர்கள் திரு.இராமசந்திர முதலியார் அவர்களிடமிருந்து 1981 வருடம் பத்திர பதிவு எண்.49/99/1981 திருமுல்லைவாயில் கிராமம் சரசுவதி நகர் சர்வே எண்.365/1, 365/2ல் உள்ள மனை எண்.482–ஐ வாங்கினார். எனது தந்தை 2005–ல் காலமாகிவிட்டார். அவர் மறைவிற்கு பிறகு நான் எங்கள் இடத்தை பார்க்க சென்ற போது வேறு ஒருவர் என்னுடைய அனுமதி இல்லாமலும், ஆவடி மாநகராட்சி அனுமதியில்லாமலும் கட்டடம் கட்டியிருந்தது தெரிய வந்தது. எனவே அனுமதியின்றி கட்டப்பட்ட கட்டிடத்தை இடிக்க உரிய சட்டபூர்வ நடவடிக்கை எடுக்குமாறு ஆவடி மாநகராட்சி ஆணையருக்கு உத்தரவு இடுமாறு இம்முறைமன்ற நடுவர் அவர்களை தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்."

6. ஆவடி மாநகராட்சியில் பணிபுரியும் உதவி நகர அமைப்பு அலுவலர் திரு.கி.சுரேஷ் மற்றும் இளநிலை பொறியாளர், திரு.ஆர்.கண்ணதாசன் ஆகியோர் 24.01.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்கள்:

"ஆவடி மாநகராட்சி எல்லைக்குட்பட்ட திருமுல்லைவாயில் கிராமம், சரஸ்வதி நகரில் மனை எண்.482–ல் உள்ள திரு.ஜான்சன் என்பவருக்கு சொந்தமான வணிக வளாகம் மற்றும் குடியிருப்புடன் கூடிய அனுமதியற்ற கட்டுமானத்தினை எதிர்த்து திரு.உத்தம்ராஜ் என்பவர் கடந்த 12.02.2019, 04.09.2020 மற்றும் 07.09.2020 ஆகிய தேதிகளில் முதல் அமைச்சர் தனிப்பிரிவு மற்றும் பிரதமர் தனிப்பிரிவுகளில் புகார் அளித்துள்ளார்.

அதன் அடிப்படையில் மேற்கூறிய அனுமதியற்ற கட்டுமானத்திற்கு, தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி விதிகள் 1971–இன்படி கடந்த 18.05.2018, 17.07.2018, 08.01.2021 ஆகிய தேதிகளில் திரு.ஜான்சன் என்பவருக்கு அறிவிப்பு சார்வு செய்யப்பட்டது. இந்நிலையில் மேற்கூறிய புகார் குறித்து விசாரணை மேற்கொள்ள திரு.ஜான்சன் என்பவருக்கு 12.01.2021 அன்று மீண்டும் அறிவிப்பு சார்வு செய்யப்பட்டது. ஆனால், அவ்விசாரணையில் திரு.ஜான்சன் என்பவர் ஆஜராகவில்லை. இறுதியாக திரு.ஜான்சன் என்பவருக்கு மேற்கூறிய கட்டிடத்தினை பூட்டி முத்திரையிட ஏதுவாக கட்டிடத்தினை காலி செய்ய 02.02.2021, 23.07.2021 ஆகிய தேதிகளில் அறிவிப்பு சார்வு செய்யப்பட்டது. இந்நிலையில் கடந்த 24.09.2021 அன்று முதற்கட்டமாக மேற்கூறிய கட்டிடத்தில் உள்ள வணிக கடைகள் பூட்டி முத்திரையிடப்பட்டது. அதனை தொடர்ந்து பூட்டி முத்திரையிட்ட கடைகளின் மின்சார இணைப்பினை துண்டிக்க உதவி பொறியாளர், மின்சார வாரியம், திருமுல்லைவாயில் சரகம் அவர்களுக்கு 05.10.2021 அன்று கடிதம் அனுப்பப்பட்டது. இறுதியாக மீதமுள்ள குடியிருப்பு பகுதிகளை பூட்டி முத்திரையிட ஏதுவாக கட்டிடத்தினை காலி செய்ய கடந்த 24.09.2021 மற்றும் 14.06.2022 ஆகிய தேதிகளில் அறிவிப்பு சார்வு செய்யப்பட்டு, மாநகராட்சி பணியாளர்கள், காவல் துறை மற்றும் மின்சார வாரியம் ஆகியோர் முன்னிலையில் கடந்த 27.06.2022 அன்று பூட்டி முத்திரையிடப்பட்டது.

இதனை தொடர்ந்து, திரு.ஜான்சன் என்பவரால் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு எண்.W.P.No.21781 of 2022-ல் பூட்டி முத்திரையிடப்பட்ட கட்டிடத்தினை திறந்திட வழக்கு தொடரப்பட்டது. அதனை தொடர்ந்து மேற்கண்ட மேல்முறையீட்டு வழக்கில் முதல் பிரதிவாதியான அரசு செயலர், வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை அவர்களுக்கு (தமிழ்நாடு நகர்ப்புற ஊரமைப்பு சட்டம்) பிரிவு 80A-ன் கீழ் அளிக்கப்பட்ட மேல்முறையீட்டு மனுவினை மூன்று மாத காலத்திற்குள் தீர்வு காண அறிவுறுத்தி ஆணையிடப்பட்டது. இறுதியாக திரு.ஜான்சன் என்பவருக்கு மேற்கூறிய அனுமதியற்ற கட்டுமானத்தினை இடித்து அப்புறப்படுத்த 18.10.2023, 27.11.2023 மற்றும் 22.01.2025 ஆகிய தேதிகளில் அறிவிப்பு சார்வு செய்யப்பட்டுள்ளது. மேலும் மேற்கூறிய அனுமதியற்ற கட்டுமானத்தினை அப்புறப்படுத்த சட்டப்படியான அடுத்த கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்கிற விபரங்கள் இம்முறைமன்ற நடுவத்திற்கு தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிறோம்."

7. மனுதாரரின் புகார், அவரது வாக்குமூலம் மற்றும் எதிர்மனுதாரரான ஆவடி மாநகராட்சி ஆணையர் அவர்களின் விளக்க அறிக்கை மற்றும் ஆவடி மாநகராட்சி ஆணையர் அலுவலகத்தில் பணிபுரியும் உதவி நகர அமைப்பு அலுவலர் திரு.கி.சுரேஷ் மற்றும் இளநிலை பொறியாளர், திரு.ஆர்.கண்ணதாசன் ஆகியோரின் வாக்குமூலங்கள் ஆகியவை தொடர்புடைய ஆவணங்களுடன் இம்முறை மன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனையில் பின்வரும் விவரங்கள் தெரிய வருகிறது.

8. மனுதாரர் தனது மனுவில் சென்னை, திருமுல்லைவாயில் கிராமம், சரசுவதி நகரில் உள்ள மனை எண்.482–ல் அனுமதி பெறாமல் விதிமுறை மீறி கட்டடம் கட்டப்பட்டுள்ளதை அகற்றிட இம்முறைமன்ற நடுவத்தினை கோரியுள்ளார்.

ஆவடி மாநகராட்சி எல்லைக்குட்பட்ட திருமுல்லைவாயில் கிராமம், சரஸ்வதி நகரில் மனை எண்.482–ல் உள்ள திரு.ஜான்சன் என்பவருக்கு சொந்தமான வணிக வளாகம் மற்றும் குடியிருப்புடன் கூடிய அனுமதியற்ற கட்டுமானத்தினை எதிர்த்து திரு.உத்தம்ராஜ் என்பவரது புகாரின் அடிப்படையில் மேற்கூறிய அனுமதியற்ற கட்டுமானத்திற்கு, தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி விதிகள் 1971–இன்படி திரு.ஜான்சன் என்பவருக்கு அறிவிப்பு சார்வு செய்யப்பட்டு. மேற்கூறிய புகார் குறித்து விசாரணை மேற்கொள்ள திரு.ஜான்சன் என்பவருக்கு 12.01.2021 அன்று மீண்டும் அறிவிப்பு சார்வு செய்யப்பட்டுள்ளது. ஆனால், அவ்விசாரணையில் திரு.ஜான்சன் என்பவர் ஆஜராகவில்லை. மேற்கூறிய கட்டிடத்தினை பூட்டி முத்திரையிட ஏதுவாக கட்டிடத்தினை காலி செய்ய அறிவிப்பு சார்வு செய்யப்பட்டு, முதற்கட்டமாக மேற்கூறிய கட்டிடத்தில் உள்ள வணிக கடைகள் பூட்டி முத்திரையிடப்பட்டது. பின்பு பூட்டி முத்திரையிட்ட கடைகளின் மின்சார இணைப்பினை துண்டிக்க உதவிப்பொறியாளர், மின்சார வாரியம், திருமுல்லைவாயில் சரகத்திற்கு கடிதம் அனுப்பப்பட்டது. மீதமுள்ள குடியிருப்பு பகுதிகளை பூட்டி முத்திரையிட ஏதுவாக கட்டிடத்தினை காலி செய்ய அறிவிப்பு சார்வு செய்யப்பட்டு, மாநகராட்சி பணியாளர்கள், காவல் துறை மற்றும் மின்சார வாரியம் ஆகியோர் முன்னிலையில் பூட்டி முத்திரையிடப்பட்டது. இதனை தொடர்ந்து, திரு.ஜான்சன் என்பவரால் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு எண்.W.P.No.21781 of 2022-ல் பூட்டி முத்திரையிடப்பட்ட கட்டிடத்தினை திறந்திட வழக்கு தொடரப்பட்டது. மேற்கண்ட மேல்முறையீட்டு வழக்கில் முதல் பிரதிவாதியான அரசு செயலர், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அவர்களுக்கு (தமிழ்நாடு நகர்ப்புற ஊரமைப்பு சட்டம்) பிரிவு 80A-ன் கீழ் அளிக்கப்பட்ட மேல்முறையீட்டு மனுவினை மூன்று மாத காலத்திற்குள் தீர்வு காண அறிவுறுத்தி ஆணையிடப்பட்டது.

திரு.ஜான்சன் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறையில் அவரது அனுமதியற்ற கட்டுமானத்தினை முறைப்படுத்த கோரி சமர்ப்பித்த விண்ணப்பம் மேற்கூறிய கட்டிடம் செங்குன்றம் நீர்பிடிப்பு பகுதியில் அமைவதாக தெரிவித்து, அவ்விண்ணப்பம் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையில் நிராகரிக்கப்பட்டு உத்தரவிடப்பட்டுள்ளது.

இறுதியாக திரு.ஜான்சன் என்பவருக்கு மேற்கூறிய அனுமதியற்ற கட்டுமானத்தினை இடித்து அப்புறப்படுத்த 18.10.2023, 27.11.2023 மற்றும் 22.01.2025 ஆகிய தேதிகளில் அறிவிப்பு சார்வு செய்யப்பட்டு, மேற்கூறிய அனுமதியற்ற கட்டுமானத்தினை அப்புறப்படுத்த சட்டப்படியான அடுத்த கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்கிற விபரங்கள் ஆவடி மாநகராட்சி ஆணையர் அலுவலகத்தில் பணிபுரியும் உதவி நகர அமைப்பு அலுவலர் திரு.கி.சுரேஷ் மற்றும் இளநிலை பொறியாளர், திரு.ஆர்.கண்ணதாசன் ஆகியோரின் வாக்குமூலம் மற்றும் ஆவடி மாநகராட்சி ஆணையரின் அறிக்கை வழியாக அறிய முடிகிறது.

மனுதாரர் தனது புகாரில் தெரிவித்துள்ள திரு.ஜான்சன் என்பவருக்கு 25.02.2025–ல் நடைபெறும் விசாரணையில் ஆஜராகுமாறு இம்முறைமன்ற நடுவத்தில் 13.02.2025 நாளிட்ட அழைப்பாணை அனுப்பப்பட்டது.

புகாருக்குள்ளான திரு.ஜான்சன் என்பவருக்கு பதிவு தபாலில் அன்னாருடைய முகவரிக்கு அனுப்பப்பட்ட அழைப்பாணை, திரு.ஜான்சன் **"Left"** என்ற அஞ்சலக குறியீட்டுடன் இம்முறைமன்றத்தில் 20.05.2025 அன்று திருப்பி பெறப்பட்டது.

இந்நிலையில், மனுதாரர் தனது புகாரில் குறிப்பிட்டுள்ள திரு.ஜான்சன் என்பவரின் அனுமதியற்ற கட்டுமானத்தினை அப்புறப்படுத்த சட்டப்படியான அடுத்த கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்ற ஆவடி மாநகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் ஆவடி மாநகராட்சி உதவி நகர அமைப்பு அலுவலர், இளநிலை பொறியாளர் தங்களது வாக்குமூலத்தில் தெரிவித்தவாறு உரிய தொடர் நடவடிக்கை விரைவில் மேற்கொள்ள ஆவடி மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2025-ஆம் ஆண்டு மார்ச் 04-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

(1) திரு. T. உத்தம்ராஜ்,
எண்.5/2–(1) செங்கழநீர் பிள்ளையார் கோவில் தெரு,
மயிலாப்பூர்,
சென்னை–600004.

(2) ஆணையர்,
ஆவடி மாநகராட்சி, ஆவடி,
சென்னை–600 054.

(3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை–600 028.

(4) இணை இயக்குநர்,
ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை–600 028.

நகல்

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இ.கோ. / உதிரி.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் சென்னை–600 032

சட்ட ஆலோசகர்/செயலாளர் (FAC).
4.3.25
4/3/25
2/10